சூழ்நிலை இருக்கிறது. மேலும் நாகப்பட்டினம் மாவட்டத்திலேயே பழையாரில்தான் மீன்பிடித் துறைமுகம் உள்ளது. அதனால் நாகப்பட்டினத்திலே இருக்கக்கூடிய மீனவர் பயிற்சிப் பள்ளியை சீர்காழியிலுள்ள பழையார் மீன்பிடித் துறைமுகத்திற்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்கு மீனவர் பயிற்சி நிலையம் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று அதுசம்பந்தமாக ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 69, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.*

69—

சுற்றுலா மேம்பாடு

*** 48228—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் சுற்றுலாவை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14–11–2003 முதல் குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மாசுபடாமல் சுற்றுலாவை மேம்படுத்த கண்ணாடி இழை அடித்தளப் படகுகள் வாங்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன.*

திரு. கே. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரியல் பாடப் பிரிவிலே பல்வேறு ஆராய்ச்சி மாணவர்கள் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் அந்தப் பகுதியிலே ஆய்வு செய்கின்ற ஒரு தீவாக இருந்து கொண்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி இப்போது புதிய படகுகள் விட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பவளப் பாறை*

2005 செப்டம்பர் 27]

ஆய்வு, மீன்வள ஆய்வு போன்ற பல ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கும், விரிவுபடுத்துவதற்கும், அதேபோன்று இங்கே சுற்றுலாத் தளத்திற்கு, வருகிறவர்களின் பயன்பாட்டிற்கு...

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம்: அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருசடைத் தீவு என்பது வனத் துறையினால் வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின்கீழ் மிகவும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக, தேசிய பூங்காவாக 1986 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் அத்து மீறி நுழைவதும், இந்தப் பகுதியிலிருந்து எந்த தடை செய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதும் குற்றமாகும். இந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தாத சில ஆராய்ச்சிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்க இந்தச் சட்டத்தில் இடம் உள்ளது. அந்த அனுமதியும் தலைமை வன உயிரின காப்பாளர், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டியது அவசியமாகும். 1998–1999 ஆம் ஆண்டு அரசு நிதி உதவி திட்டத்தின்கீழ் மண்டபம் மற்றும் குருசடைத் தீவில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 18.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, அடித்தளப் படகுகள், அடித்தள கண்ணாடி இழை 9 படகுகள் வனத் துறையினால் வாங்கப்பட்டு, 14–11–2003 முதல் பயன்பாட்டில் உள்ளன. இவை பாம்பன் பகுதியை ஒட்டியுள்ள 9 மீனவக் கிராமங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன் அடையுமாறு கிராம மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூலம் இம்மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்படகுகள் மூலம் பவளப்பாறை மற்றும் வண்ண மீன்களை படகிலிருந்தபடியே பார்வையிடலாம். 1998–1999 ஆம் ஆண்டு அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் தேசிய புனிதத் தலம் இராமேஸ்வரம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 57 இலட்சம் அனுமதிக்கப்பட்டு தார்ச் சாலைகள் அமைத்தல், அரசு விருந்தினர் மாளிகை முன்புறம் பூங்கா, பாம்பன் மற்றும் இராமேஸ்வரத்தில் மரக்கன்றுகள் நடுதல், பொதுக் கழிப்பிடம் போன்ற பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18–07–2002 அன்று அறிவித்தபடி இராமநாதபுரத்தில்

[2005 செப்டம்பர் 27

ரூ. 35 இலட்சத்தில் சுற்றுலா விடுதியும், ரூ. 22 இலட்சத்தில் கடற்கரைப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு விவேகானந்தா சுற்றுலா சுற்றுச் சாலை அபிவிருத்தித் திட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் பகுதியில் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 168.24 இலட்சத்தில் ஒப்புதல் வழங்கி, முதல் தவணையாக ரூ. 54.47 இலட்சமும், இரண்டாவது தவணையாக ரூ. 84 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003–2004 ஆம் ஆண்டு, இராமேஸ்வரத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் பறவைகள் கூடம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூ. 43 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி, முதல் தவணையாக ரூ. 34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) என்ன, துரைமுருகன் என்ன?

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக் கோருதல்

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்ப்பார்க்கிறேன். இது ஒன்றும் தனிப்பட்ட வகையில் அல்ல. இந்த மன்றத்திற்கு, வருங்காலம் இந்த மன்றம் செம்மையாக நடைபெறுவதற்கு உதவுகிற வகையில், மன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரண்டும் உண்டு. நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகிறபொழுது, பலதரப்பு மக்கள் பாதிக்கப்படுகிறபொழுது, அவற்றைச் சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இப்படி சட்டமன்றம் நடக்கிறபொழுது, அந்தப் பிரச்சினையை மன்றத்திலே கிளப்புவார்கள், ஆளும் கட்சி அதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு ஆசையின் காரணமாக. அப்படி எதிர்க் கட்சிகளாக இருக்கிற எங்களிடத்தில், ஆளும் கட்சியைவிட அதிகமான குறை சொல்லுகிறவர்கள் வருவார்கள். அந்தப் பிரச்சினையை நாங்கள் ஒரு